இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 41 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 03 – வியாழக்கிழமை 19 செப்டம்பர் 2024 – வெளியீர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 41: Thiruvalluvar Year - 2055 - Purataasi 03 - Thursday 19 September 2024 - Dak 12 Pages ₹ 5.00

## மாநில சுயாட்சியை வென்றெடுக்க சட்ட முன்னெடுப்புகளை கழகம் மேற்கொள்ளும்!

# நமது இலக்கு 2026 தேர்தல் : வரலாற்று வெற்றியைப் பெறுவோம்!

## கழக முப்பெரும் விழா – பவள விழாவில் விருதுகளை வழங்கி

## கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் முழக்கம்!

சென்னை, செப். 19 -

**“எல்லா அதிகாரமும் கொண்டவைகளாக மாநில அரசுகளை மாற்றும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர முயற்சிக்கும் சட்ட முன்னெடுப்புகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் செய்யும்!” என்றும் - “நமது தொடர் வெற்றிகள் மூலமாக நூற்றாண்டு விழாவை நோக்கி முன்னேறுவோம்! அடுத்து நமது இலக்கு 2026 தேர்தல். இதுவரை இப்படியொரு வெற்றியை எந்தக் கட்சியும் பெற்றதில்லை என 2026-இல் வரலாறு சொல்ல வேண்டும்!” என்றும் - கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (17-09-2024) சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ திடலில் நடைபெற்ற கழக முப்பெரும் விழா - பவள விழா நிறைவு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

கழகத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு : -



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.9.2024) சென்னை, நந்தனம், ஓய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெற்ற தி.மு.க. முப்பெரும் விழாவில் விருதாளர்களுக்கு விருதுகளை வழங்கி, விழாப் பேருரையாற்றினார். இவ்விழாவில், சுழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு. கழக துணை பொதுச் செயலாளர்கள் – ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, ஆ. ராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., அந்தியூர் செல்வராஜ் எம்.பி., கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் – மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா. சுப்பிரமணியன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாவட்ட கழகச் செயலாளர்கள். கழகத்தின் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

* கழகம் - நல்ல கழகம்!
நம் திராவிட முன்னேற்றக் கழகம்!
அதன் திருப்பணி என்றென்றும் தொடரும்!

* கல்லக்குடி கொண்டு கன்னித் தமிழ் வென்று
உள்ளம் குடிகொண்ட கழகம்!

* வில்லும் வாளுமின்றி வெல்லும் திறம் கொண்டு
வெற்றி பல கண்ட கழகம்!

* அன்று அறிஞர் வழியில் வந்த கழகம்!
பின்னர் கலைஞர் தலைமை தந்த கழகம்!

* அன்று பிள்ளை நிலவான கழகம்!
இன்று பவளவிழா காணும் கழகம்!

* கழகம் - நல்ல கழகம்!
நம் திராவிட முன்னேற்றக் கழகம்!
அதன் திருப்பணி என்றென்றும் தொடரும்!

தியாகத்தின் உருவமான தி.மு.க. தொண்டர்களின் உள்ளத்துக்கு எனது வணக்கம்!

என்னை இப்படி தலைநிமிர்ந்து முழங்க வைத்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீரர்கள் அனைவரும் வாழும் திசையை நோக்கிப் பாசமிகு வணக்கம்! உங்களின் வியர்வையாலும் இரத்தத்தாலும் மூச்சுக்காற்றாலும் உழைப்பாலும் தான் இத்தனை ஆண்டுகாலம் கழகம் கம்பீரமாக நிற்கிறது. அப்படிப்பட்ட தியாகத்தின் உருவமான திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் உள்ளத்துக்கும் உங்களது இல்லத்துக்கும் எனது அன்பான வணக்கம்!

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

# காஞ்சியில் செப்.28ல் தி.மு.க. பவள விழா பொதுக்கூட்டம்!

## கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கின்றனர்!

சென்னை, செப்.19-

**காஞ்சிபுரத்தில் வருகிற செப்டம்பர் 28ந் தேதி நடைபெறும் கழக பவள விழா பொதுக் கூட்டத்தில், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார். கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் தலைமையில் நடைபெறும் இப்பொதுக்கூட்டத்தில் கழகக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர் என தலைமைக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.**

தி.மு.கழக பவள விழாவையொட்டி காஞ்சிபுரத்தில் தி.மு.க கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் பவள விழா மாபெரும் பொதுக்கூட்டம் வருகிற 28ஆம் தேதி நடைபெறும் என்று தி.மு.க தலைமை கழகம் நேற்று (18.9.2024) அறிவித்துள்ளது.

தி.மு.க பவளவிழா - கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் மாபெரும் பொதுக்கூட்டம் (28.09.2024) சனிக்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி திடலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.



கூட்டத்திற்கு கழக பொதுச்செயலாளர் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையேற்கிறார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வரவேற்புரையாற்றுகிறார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் முன்னிலை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி,

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை,

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ,

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச்செயலாளர் கே.பாலகிருஷ்ணன்,

இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச்செயலாளர் இரா.முத்தரசன்

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீன்,

விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன்

மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன்,

மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா,

கொங்குநாடு தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன்,

தமிழ்நாடு வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி.வேல்முருகன்,

மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் ஜி.எம்.ஸ்ரீதர் வாண்டையார்

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் கட்சித் தலைவர் பொன்.குமார்,

சமத்துவ மக்கள் கழகத்தின் நிறுவனர் எர்ணாவூர் நாராயணன்,

மக்கள் விடுதலை கட்சித் தலைவர் முருகவேல் ராஜன்,

மனிதநேய ஜனநாயக கட்சித் தலைவர் தமீமுன் அன்சாரி,

முக்குலத்தோர் புலிப்படை கட்சித் தலைவர் கருணாஸ்,

ஆதித் தமிழர் பேரவை தலைவர் அதியமான்

தமிழ் மாநில தேசிய லீக் தலைவர்




திருப்பூர் அல்தாப்

பார்வர்டு பிளாக் நிறுவனத் தலைவர் பி.என்.அம்மாவாசி உள்ளிட்டோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குகின்றனர்.

காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன் நன்றி கூறுகிறார்.